1993 பிப்ரவரி 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு கூடாது; அதைத் தவிர்க்கவும்.

திரு. கே. முனிவெங்கடப்பன் : அவற்றைத் தவிர்க்கும் வகையிலே, ஓட்டளிப்பவர்களுக்கு பொதுத் தேர்தலில் மையிடுவதைப்போல, இதற்கும் மையிடுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆட்சி காலத்தில், கூட்டுறவுத் தேர்தல்களில் என்னென்ன தில்லுமுல்லுகள் நடைபெற்றன என்பதை இந்த அரசு அறியும். அப்படிப்பட்ட எந்தவிதமான தில்லுமுல்லுகளும் நடக்காமல் இருக்க புரட்சித் தலைவியின் அரசு பார்த்துக்கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

வினா எண். 55, திரு. சி. சுவாமிநாதன் ; இருக்கையில் இல்லை.

வினா எண். 56. திரு. என். ஆர். சிவபதி; மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

56—

விவசாயிகளுக்கு மானிய விலையில் பவர் டில்லர் டிராக்டர் வழங்குதல்.

*9797 — திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விவசாயிகளுக்கு மானிய விலையில் பவர் டில்லர் டிராக்டர் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எதன் அடிப்படையில் மானியத் தொகை வழங்கப்படும் ?

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : வேளாண்மைத் துறை அமைச்சர் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இந்தப் பொன்னாடு, உழவரின் திருநாடு, வேளாண்மையில் முதன்மை பெற்று விளங்க வேண்டும் என்று விரைந்து செயல்படும் நம் ஆற்றல் மிக்க முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், 1992—93 ஆம் ஆண்டில் பவர் டில்லர் வழங்கும் திட்டத்தை, கடந்த கூட்டத் தொடரில் இந்த மாமன்றத்தில் அறிவித்தார்கள். இத்திட்டத்தில் சிறுகுறு விவசாயிகளுக்கு ரூ. 12,000 மானியத்தில் 2 ஆயிரம் பவர் டில்லர்கள் வழங்கப்பட்டு வருகிறது. இதற்கு அரசு 240 லட்சம் ரூபாய் வழங்கியுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு மானிய விலையில் பவர் டில்லர்கள் வழங்குவது, ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக வழங்கப்படுகிறதா ? அல்லது, நேரடியாக வேளாண்மைத் துறையின் மூலம் வழங்கப்படுகிறதா? மேலும், மொத்த விலையில், எவ்வளவு மானியம் வழங்கப்படுகிறது? அதில் ஆதிதிராவிடர்களுக்கு சிறப்புச் சலுகைகள் எத்தனை உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியத்தின் வாயிலாக இந்த பவர் டில்லர்கள் வழங்கப்படுவதில்லை. வேளாண்மைத் துறையைச் சார்ந்த வேளாண் அலுவலர்களிடத்திலே, சிறுகுறு விவசாயிகள் விண்ணப்பம் செய்கிறார்கள். அவர்கள் தகுதியின் அடிப்படையில், தகுதி உடையவர்களாக இருந்தால், அவர்களுக்கு தமிழ்நாடு வேளாண் தொழில் கழகத்தின் வாயிலாக பவர் டில்லர்கள் வழங்கப்படுகிறது. இதிலே அனைத்துப் பிரிவினருக்கும், ஆதிதிராவிடர்கள், சிறுகுறு விவசாயிகள் அனைவருக்கும் ஒரு பவர் டில்லருக்கு 12,000 ரூபாய் மானியத்தை அரசு வழங்குகிறது.

திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாப் பகுதிகளுக்கும் ஒரே எண்ணிக்கையில் கொடுக்காமல், நஞ்சைப் பகுதிகளுக்கு பவர் டில்லர்கள் அதிகரித்துக் கொடுக்கப்படுமா? ஏனென்றால், எனது தொட்டியம் தொகுதியில், தொட்டியம் ஒன்றியம், தாத்தையங்கார் பேட்டை ஒன்றியம் என்ற இரண்டு ஒன்றியங்கள் இருக்கின்றன. அவற்றில், தொட்டியம் ஒன்றியம்

1993 பிப்ரவரி 10]

நஞ்சைப் பகுதி அதிகமாக உள்ள பகுதி. தாத்தையங்கார் பேட்டை ஒன்றியம் புஞ்சை அதிகம் உள்ள பகுதி. ஆகவே, நஞ்சை பகுதியில் ஒதுக்கப்படுகிற பவர் டில்லர்களை உடனடியாக வாங்கி விடுகிறார்கள். ஆனால், புஞ்சைப் பகுதியில் ஒதுக்கப்படுகிற பவர் டில்லர்கள் அதிகமாக விற்பனையாகாமல் அங்கேயே இருக்கின்றன. ஆகவே, நஞ்சைப் பகுதிகளுக்கு அதிக எண்ணிக்கையில் பவர் டில்லர்கள் ஒதுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் தமிழ்நாடு முழுவதிலுமுள்ள விவசாயிகள் பயன்பெறும் வகையில், அனைத்து மாவட்ட மக்களுக்கும் வழங்கப்படுகிறது. இருந்தாலும், எந்த மாவட்டத்திலே, எவ்வளவு விவசாயிகளுக்கு, எவ்வளவு பவர் டில்லர்கள் தேவையோ, அந்தப் பகுதிகளுக்கு வேண்டிய அளவு வழங்குவதற்கு, தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணை வழங்கியிருக்கிறார்கள். மேலும், 18 குதிரைத் திறன் கொண்ட டிராக்டர்கள் சிறுகுறு விவசாயிகளுக்கு ரூ. 30 ஆயிரம் மானியத்தில் வழங்குவதற்கும் தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணை வழங்கி இருக்கிறார்கள் என்பதையும் தங்கள் வாயிலாக, இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சிறு, குறு விவசாயிகளுக்கு பவர் டில்லர்கள் வழங்குகிறபோது, வேளாண்மைத் துறையை அணுகி அவர்கள் மனுக்களைக் கொடுத்த பின்னர், வங்கிகளுக்குப் போய், அவர்களை அணுகுகிற வேளையிலே, அவர்களுக்குப் பிரச்சினை எழுகிறது. குறைந்தபட்சம் இவ்வளவு ரூபாயை அங்கே செலுத்தினால்தான் அதைப் பெறமுடியும் என்கிற ஒரு நிபந்தனை விதிப்பதால், விவசாயிகள் அதைப் பெற முடியவில்லை என்று எங்களைப் போன்ற வெள்ளத்தால் அதிகமாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் கருதுகிறார்கள். ஆகவே, அதற்கு ஏதாவது விதிமுறைகளைத் தளர்த்துகின்ற அல்லது அந்த விவசாயிகளுக்குச் சுலபமான முறையிலே அதனைப் பெற்றுக்கொள்ளுகின்ற வாய்ப்பினைத் தருகின்ற திட்டம் அரசிடம் எதுவும் உள்ளதா என்பதை அறிய விரும்புகின்றேன்.

]1993 பிப்ரவரி 10

முற்பகல் 10.55

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் ரொக்க மாகவோ அல்லது நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலமாகவோ அல்லது கூட்டுறவு, தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் மூலமாகவோ அல்லது லேண்டு டெவலப்மெண்ட் பேங்க் மூலமாகவோ மனுச் செய்தால் அவர்களுக்கு வழங்கப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலிலே சிறு குறு விவசாயிகளுக்கு பவர் டில்லருக்கு ரூ. 12,000 மானியமாகவும் டிராக்டர் வாங்குவதற்கு ரூ. 30,000 மானிய மாகவும் கொடுப்பதாகச் சொன்னார்கள். சிறு குறு விவ சாயிகள் 5 ஏக்கர், 3 ஏக்கருக்கு கீழே உள்ளவர்கள்தான். ஆனால் கொஞ்சம் மீடியம் நிலையிலே உள்ளவர்கள் 10 ஏக்கருக்கு நிலம் இருந்தால் அவர்களும் பவர் டில்லர் உபயோகப்படுத்தலாம். டிராக்டர் உபயோகப்படுத்தலாம் எனவே, அந்த விவசாயிகளுக்கும் மானியத் தொகையிலே பவர் டில்லர் டிராக்டர் வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய முடியுமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை சிறு குறு விவசாயிகள் மட்டுமே பயன்படுத்த வேண்டுமென்று மத்திய அரசு விதிமுறை வகுத்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்திய அரசினுடைய ஆளுங்கட்சியைச் சார்ந்தவர் என்கின்ற காரணத்தினால் அவர்கள் மத்திய அரசிடம் தொடர்பு கொண்டு இந்தத் திட்டத்திற்கு விதிவிலக்கு வாங்கித் தந்தால் நம்முடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 57, செல்வி எல். சுலோசனா, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.